# அறநெறி அமுதம்

ஆன்மீக விழுமியக் காலாண்டிதழ் - 29



இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

40, ராமகிருஷ்ண வீதி, கொழும்பு - 06.

அமுதம் 8

துளி 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அன்புக் குழந்தைகளே!

சிரத்தைதான் நமக்குத் தேவை. மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையில் எது வேறுபாட்டை உருவாக்குகிறது என்றால் இந்தச் சிரத்தைதான், வேறு எதுவும் இல்லை. ஒருவனை மகத்தானவனாகவும், மற்றொருவனைப் பலவீனமானவனாகவும், கீழானவனாகவும் எது ஆக்குகின்றது என்றால் இந்தச் சிரத்தைதான். யார் தன்னைப் பலவீனன் என்று நினைக்கிறானோ அவன் பலவீனனாகவே ஆவான் என்பார் என் குருதேவர். உண்மைதான். இந்தச் சிரத்தை உங்களுக்குள் நுழைந்தாக வேண்டும். ஆன்மாவில் எல்லாமே இருக்கிறது என்பதை அனைவரும் உறுதியாக நம்புகின்றனர். அது வெளியே வர வேண்டும். வெளிப்பட வேண்டும், அவ்வளவுதான். அந்தச் சிரத்தைதான் இப்பொழுது எல்லோருக்கும் தேவைப்படுவது. இந்தத் தன்னம்பிக்கையைப் பெறுவதுதான் நாம் செய்ய வேண்டிய பெரிய பணி. நம் தேசிய இரத்தத்திலே படர்ந்து வருகின்றதே ஒரு நோய். எல்லாவற்றையும் கேலி செய்வதும் பொறுப்பின்மையுமாகிய அந்தப் பயங்கர நோயை விட்டுவிடுங்கள், அறவே அகற்றுங்கள். வலிமை பெறுங்கள். சிரத்தை பெறுங்கள் பெற்று விட்டீர்களானால் எல்லாம் உங்களைத் தொடர்ந்தே தீர வேண்டும்.

எனவே எழுந்திருங்கள்! விழித்திருங்கள்! விரும்பிய இலட்சியத்தை அடையும் வரை நில்லாது செல்லுங்கள். சாதாரண மக்களிடமிருந்தே மாபெரும் மனிதர்கள் எல்லோரும் தோன்றியிருக்கிறார்கள். எதைக் கண்டும் அஞ்சாதீர்கள். நீங்கள் மகத்தான காரியங்களைச் செய்வீர்கள். பயம் தோன்றினால் அந்தக் கணமே நீங்கள் ஒன்றும் இல்லாதவர்கள் ஆகி விடுவீர்கள். பயமே உலகத் துன்பங்களுக்கெல்லாம் மூலகாரணம். மூடநம்பிக்கைகள் அனைத்திலும் கொடியது பயமே. பயமின்மை ஒரு நொடியில் சொர்க்கத்தையே நமக்கு அளிக்க வல்லது. எனவே எழுந்திருங்கள்! விழித்திருங்கள்! இலட்சியத்தை அடையும்வரை நிற்காதீர்கள்.




உங்களில்,

Vivekananda

சுவாமி விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை



யதா நத்ய: ஸ்யந்தமானா: ஸமுத்ரே-
sஸ்தம் கச்சந்தி நாமரூபே விஹாய/
ததா வித்வான் நாமரூபாத் விமுக்த:
பராத்பரம் புருஷ முபைதி திவ்யம்//

பொருள்: பெருகி ஓடுகின்ற நதிகள் தங்கள் பெயரையும் வடிவத்தையும் இழந்து கடலில் கலக்கின்றன. உண்மையை உணர்ந்தவன், அதுபோல் தனது பெயர் மற்றும் உருவத்திலிருந்து விடுபட்ட, உயர்ந்தவற்றுள் உயர்ந்தவரும் ஒளிவடிவானவருமான பரம்பொருளை அடைகிறான்.

- ஸ்ரீமத் பகவத் கீதை -

காற்றுடனே சேர்ந்த கனலுருவைக் கண்டவழி
மாற்றியினிப் பிறக்க வாராதே - ஏற்றபடி
ஓடி அலையாதே ஓங்காரத் துள்ளொளியை
நாடியிருப்போம் மனமே நாம்.

- பட்டினத்தார் பாடல் -

இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.
40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு 06.

அமுதம் 8 துளி 1

தை - 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த இதழில். . .

தலைப்பு — பக்கம்


பிரார்த்தனை....................................................01
இதழாசிரியர்களிடமிருந்து....................................02
கவிதை - "உன்னை உருவாக்கு" ...........................03
பாப்பா பாப்பா கதை கேளு
- "வாழ்வும் தாழ்வும்"..........................................04
உண்மைச்சம்பவம் - ..........................................06
பஞ்ச தந்திரக்கதை
- "தீயோர் கூட்டுறவு"........................................08
படக்கதை -"தியானசித்தன் - நரேன்"...................... 10
சிரத்தாஞ்சலிக் கட்டுரை.......................................13
இராமகிருஷ்ண குடும்பம் - "யோகின்மா"..................15
கட்டுரை - புதிய சங்ககுரு......................................19
செய்திகள்.........................................................22
குறுக்கெழுத்துப் போட்டி........................................24


## இதழாசிரியர்களிடமிருந்து

கேட்டதைக் கொடுக்கும் தேவலோக மரம் கற்பகதரு. பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் கற்பக விருட்சமாய் பக்தர்களுக்கு அருள் பாலித்த தினமே கற்பகதரு தினம். "1886 ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதியன்று பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் கருணை வெள்ளம் கரைகளையெல்லாம் உடைத்தெறிந்து பொங்கிப் பிரவாகித்த தினம்" என்று அன்றைய தினத்தை வர்ணிக்கிறார் குருதேவரின் வரலாற்று ஆசிரியரான சுவாமி சாரதானந்தர். அந்நன்னாளில் வெளிவரும் இவ்விதழைத் திவ்விய திரிமூர்த்திகளின் திருவடிகளில் காணிக்கையாக்குகிறோம்.

நன்றி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்னை உருவாக்கு!

எழுந்து நடைபோடு மனிதா எழுந்து நடை போடு
பூமிகள் அதிர பூதங்கள் நடுங்க எழுந்து நடைபோடு
பகலவன் மறைகிறான் நேரத்தைக் கரைக்கிறான் எழுந்து
நடைபோடு
(எழுந்து.....)

வேகம் வேண்டும் விவேகமும் வேண்டும் நிதானம்
பெறவேண்டும்
சிந்தை நிதானம் பெற வேண்டும்
தாகம் வேண்டும் தியாகமும் வேண்டும் வெற்றியுன் கரம்
சேரும்
கர்ம வெற்றியுன் கரம் சேரும்
(எழுந்து.....)

எதிரினில் எவனும் நிற்க முடியாத வேகத்துடன் சீறு
செயல் வேகத்துடன் சீறு
மதிகெடு சலனங்கள் மாய்த்திடு வலிவொடு
புயலென உருவாகு
பண்புப் புயலென உருவாகு
(எழுந்து.....)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புஷ்பா பாப்பா கதை கேளு!

## வாழ்வும் தாழ்வும்

ஒரு குதிரை இளமையாக இருக்கும் போது இராணுவத்தில் பணியாற்றியது. அப்போது அதற்கு மிகவும் உயர்ந்த இரக உணவு தரப்பட்டது. அதனை பராமரிக்கப் பல ஆட்கள் இருந்தார்கள். ஒருவன் குதிரையை அன்றாடம் குளிபாட்டி விடுவான். மற்றொருவன் உடம்பு வலி தீர அதன் உடம்பெல்லாம் தேய்த்து விடுவான்.


உடலில் சிறு பாதிப்பு ஏற்பட்டாலும் கவனித்து உடனுக்குடன் சிகிச்சை செய்வதற்கு பல மருத்துவர்கள் இருந்தார்கள். குதிரையோ இராஜ போக வாழ்க்கை வாழ்ந்தது.

போர் முடிந்த பிறகு அந்தக் குதிரையை விற்று விட்டார்கள். அதை ஒரு மா அரைக்கும் ஆலைக்காரன் விலைக்கு வாங்கினான். அவன் குதிரையைக் கடுமையாக வேலை வாங்கினான். கடினமான வேலைகளை அதற்குக் கொடுத்தான்.

சரியாக வேலை செய்யாவிட்டால் சாட்டையால் அடித்து நொறுக்கினான். மாதக் கணக்காகக் குதிரையைக் குளிப்பாட்டுவது கிடையாது.

உணவு மிகவும் மோசமானதாகவும் வயிற்றுக்குப் போதாததாகவும் இருந்தது. ஆலைக்காரனிடம் முன்னரே பல குதிரைகள் இருந்தன.

போர் முனையில் இருந்து வந்த குதிரை எப்போது பார்த்தாலும் தனது பழைய போர்க் கால வாழ்வைப் பற்றிப் பெருமையாகப் பேசித் தனது தற்காலச்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுமை நிலையைச் சொல்லி அழும்.

மற்றக் குதிரைகள் போர்முனைக் குதிரை சொல்வதை மௌனமாகக் கேட்டுகொண்டனவே தவிரப் பதில் ஏதும் சொல்வது இல்லை. அதைக் கண்ட போர்முனைக் குதிரைக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஒரு நாள் அது மற்றக் குதிரைகளை நோக்கி 'நண்பர்களே! இங்கே நாம் படும் துன்பங்களைப் பற்றி நான் பல தடவை பேசியும் நீங்கள் அது குறித்து வாயே திறக்கலில்லையே. இன்றைய நமது வாழக்கை திருப்திகரமாக இருப்பதாக நீங்கள் நினைகிறீர்களா?' என்று கேட்டது.

மற்ற குதிரைகளில் ஒன்று அதற்கு மறுமொழி கூறிற்று. 'நண்பரே உம்மைப் போல நாங்களும் ஒரு காலத்தில் உயர்ந்த வாழ்க்கை வாழ்ந்தோம் செய்தோம். அது ஒரு காலம். இப்போது அரை வயிறு உணவிற்காக அதிகமாகக் கஷ்டப்பட்டு உழைத்து அவதியுறுகின்றோம். இது ஒரு காலம். வாழ்க்கையில் உயர்வும் தாழ்வும் மாறி மாறித்தான் வரும். பழம் பெருமையைத் திரும்பத் திரும்பப் பேசிக் கொண்டிருப்பதனாலே இன்றைய துயரத்தைப் பற்றி அழுவதனாலோ ஒரு பயனும் விழையப்போவதில்லை. எதிர் காலத்திலாவது நமது நிலையில் மாற்றம் ஏற்படும் என எண்ணி மனத்தை நிம்மதியாக வைத்து கொள்வதுதான் நல்லது.' என்று அந்த குதிரை கூறிற்று.

போர்முனைக் குதிரை அதற்குப் பிறகு பழம் பெருமை பேசுவதில்லை. நிகழ் காலத்தின் வேதனை நிலை பற்றி முணுமுணுப்பதும் இல்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் பள்ளி விட்டு வந்த ஜனா, மொட்டை மாடியில் கிடந்த இரும்புக் கம்பியை எடுத்துச் சுற்றி விளையாடிய போது, கம்பி மேலே சென்ற மின்கம்பியில் பட, இடது கையில் பாதி தீக்கு இரையாக்கிவிட்டது. மறு பிறவி மீண்ட ஜனாவுக்கு இப்போது 15 வயது தான். கைகளால் இயலாத நிலையில் வாயால் தூரிகை பிடித்து, ஓவியம் வரைந்து தேசிய அளவில் பல்வேறு விருதுகளைக் குவித்து இருக்கிறான் ஜனா.

எல்லோரும் வியந்து பாராட்டும் சாதனை நாயகனாக உயர்ந்திருக்கும் ஜனாவின் வீடு சென்னை இராமாபுரத்தில் உள்ளது. அப்பா கேசவன் - அம்மா புவனேஸ்வரி - ஒரு தங்கை. பத்தாம் வகுப்பு படிக்கின்ற ஜனா இந்திய அளவில் 18 வயதுக்குள் Mouth painting (வாயினால் சித்திரம் வரையும் முறை)இல் சாதித்த ஒரே

## ஜனார்த்தனன்
## - விழிகளை விரியச்செய்யும் வியப்புச் சிறுவன்!

சிறுவன். தேசிய விருது, பாலஸ்ரீ விருது, சிறந்த படைப்பாளிக்கான (Best Creator) விருது என விருதுகளின் நாயகன்!



மின் தாக்குதலுக்கு உள்ளான ஜனா ஒன்றரை வருடகால மருத்துவ சிகிச்சைக்கு உள்ளாக வேண்டியிருந்தது. சிகிச்சைகளுக்குப் போதிய பணம் இல்லாததால் வருமானம் தந்த அச்சகத்தை (Printing press) விற்று வைத்தியம் பார்த்தார்கள். சிகிச்சையின் முடிவில் எழுந்து அமர்ந்த ஜனா மிகவும் மனம் நொந்து போயிருந்தான். கையையும், காலையும் இழந்திருந்த அவனை



ஏற்றுக்கொள்ள எந்தப் பள்ளியும் இலகுவில் முன்வரவில்லை. ஒருவழியாக நெசபாக்கம் எனும் ஊரிலுள்ள S.R.N.M பள்ளிக்கூடத்தில் அவனுக்கு அனுமதி கிடைத்தது.

வைத்தியர் தந்த ஆர்வத்தினால் வாய் மூல




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சித்திரம் (Mouth painting) வரையத் தொடங்கினான். ஆரம்பத்தில் வாயின் மேல் அண்ணம் புண்ணாகிப் போனது. ஆனால் அதற்கெல்லாம் அவன் கவலைப்படாமல் ஆர்வத்தோடு வரையத்தொடங்கினான். பள்ளிக்கூடத்திலும், ஆசிரியர்கள் கொடுத்த உற்சாகத்தினால் சராசரிக் குழந்தைகள் பங்குபற்றும் எல்லா நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றத்தொடங்கினான்.

இடது முழங்கையில் தாங்கி ஒன்றை மாட்டிக்கொண்டு அதில் பற்துரிகை என்பவற்றைப் பொருத்திக்கொண்டு எந்த வேலைக்கும் யாரையும் எதிர்ப்பாராமல் தன் ஒற்றைக்கையையே தனக்குதவியாகக்கொண்டு சாதிக்கத்தொடங்கிவிட்டான். அந்தக்குட்டிக் கையால் கணனி (Computer) இசைப்பலகை (Music keyboard) ஒளிப்பட விளையாட்டு (Viedio Game), கரம் (Carom) என்பவற்றில் ஈடுபடுகின்றான். இவையெல்லாமே இப்பொழுது ஜனாவுக்கு அத்துப்படி.

விபத்துக்கு முதலிலேயே ஓவியத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்த அவன் இப்பொழுதும் அதே ஈடுபாட்டோடு சித்திரங்களை வரைந்து குவிக்கின்றான். பிற்காலத்தில் 'கணனி வடிவமைப்பு' (Computer Designing) கற்றுக்கொண்டு உலக அளவில் சாதனை படைக்க வேண்டும் என்பதே இந்தக்குட்டிச் சாதனை வீரனின் பெரிய அவா. இதுவரை நூற்றுக்குமேல் விருதுகளை வாங்கிக்குவித்துள்ள இவனுக்குத் தினந்தோறும் ஏராளமான பாராட்டுக்கடிதங்கள் குவிந்தவண்ணமுள்ளன.



ஜனாவின் கைவண்ணம்

கையையும், காலையும் இழந்த நிலையிலும் சாதிக்கத்துடிக்கும் நெஞ்சுடன் விழிகள் விரியச் சிரித்து நிற்கும் ஜனாவைப்பார்க்கும் போது நம் மனத்தினுள்ளும் உற்சாகச் சிறகுகள் விரியாதா என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீயோர் கூட்டுறவு

ஒரு ஊரில் தேவதத்தன் என்னும் மரம் வெட்டும் தச்சன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் தன் ஊருக்கு அருகில் இருக்கும் காட்டில் மரம் வெட்டிப் பிழைத்து வந்தான். அவன் மனைவியும் அவனுக்காக சோற்று மூட்டையைக் கையில் எடுத்துக் கொண்டு அவன் கூடவே துணைக்குப் போவாள். இப்படியே அவர்கள் வாழ்க்கை அமைதியாகப் போனது.

அந்தக் காட்டில் விமலன் என்ற சிங்கம் ஒன்று வாழ்ந்தது. அங்கேயே வசிக்கும் ஒரு காக்கையும் நரியும் அதற்கு ஆத்ம நண்பர்களாக இருந்தன. இவை மூன்றும் அக்காட்டில் திரிந்து வழியில் தென்படும் மிருகங்களைக் கொன்று தின்று வாழ்ந்து வந்தன.



ஒரு நாள் சிங்கம் மாத்திரம் தனித்துக் காட்டில் திரிந்தது. அதைத் தச்சன் பார்த்து விட்டான். சிங்கமும் அவனைப் பார்த்து விட்டது 'ஐயையோ? இன்று நாம் செத்தோம்!' என்று முதலில் நடுங்கினான் தச்சன். பிறகு, சற்று தன்னைச் சமாளித்துக் கொண்டு சிங்கத்துக்கு அருகில் சென்றான். சிங்கத்திடம் இருந்து தப்பிக்கத் தச்சன் அதனிடம் 'ஐயனே! இன்று நான் கொண்டு வந்து இருக்கும் உணவைச் சுவை பாருங்கள்' என்றான்.

'இறைச்சி தின்பதுதான் என் வழக்கம். இருந்தாலும் நீ விரும்பிச் சொல்லுவதால் சற்று உருசி பார்க்கிறேன். இன்று ஏதேனும் விஷேசமான உணவோ?' என்று சிங்கம் கேட்டது.

'அப்பத்துடன் சில தித்திப்புப் பலகாரங்களும் உள்ளன. சற்று சாப்பிட்டுத்தான் பாருங்களேன்!' என்று வற்புறுத்தினான்.

உடனே சிங்கம் தச்சன் கொடுத்த உணவைத் தின்று உருசி பார்த்து 'அட நன்றாய் இருக்கிறதே!' என்று திருப்தி அடைந்தது. உடனே தச்சனுக்கு நன்றி தெரிவித்து 'உனக்கு அபயம் அளித்தேன். இனிமேல் இக்காட்டில் நீ பயமின்றித் திரியலாம்' என்று கூறிற்று சிங்கம்.

தச்சனும் அதற்கு நன்றி சொல்லி 'நாள்தோறும் நீர் மாத்திரம் வாரும். உம்முடன் வேறு எவரையும் அழைத்து வரவேண்டாம்' என்று கேட்டுக்கொண்டான்.

அவ்வண்ணமே சிங்கமும் தச்சனைத் தனியே சந்தித்து வந்தது. அவனும் அதற்கு வித விதமான உணவு படைத்து வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் சிங்கம் மற்ற மிருகங்களை வேட்டையாடுவதை அறவே விட்டுவிட்டது. சிங்கத்தின் தயவில் வாழ்ந்த வந்த காக்கைக்கும் நரிக்கும் இதனால் இரை எதுவும் கிடைக்காமல் போயிற்று. அவை பசி பொறுக்க முடியாமல் சிங்கத்திடம் சென்றன.



'அரசே! சில நாட்களாக எங்கேயோ தனியாகச் செல்கிறீர்கள். பிறகு வந்து திருப்தியுடன் படுத்து விடுகிறீர்கள். என்ன காரணமோ!' என்று வினவின.

'இக்காட்டுக்குத் தினந்தோறும் வரும் தச்சன் ஒருவன் தான் எடுத்து வரும் சுவையான சாப்பாட்டை எனக்குக் கொடுத்துவிடுகிறான். நான் அதை உண்டு திரும்பி விடுகிறேன்' என்றது சிங்கம்.

'அப்படியா! சிங்கத்தைத் தூண்டி அவனைக் கொல்ல முடியுமானால் சிரமமில்லாமல் நமக்கு உணவு கிடைக்குமே!' என்று நரியும் காக்கையும் இரகசியமாகப் பேசிக்கொண்டன. இருந்தும் அது சிங்கத்தின் காதில் விழுந்து விட்டது.

'இந்தக் கெட்ட எண்ணம் உங்களுக்கு வேண்டாம். நான் அந்தத் தச்சனுக்கு அபயம் அளித்துள்ளேன். வேண்டுமென்றால் உங்களையும் என்னுடன் அழைத்துச் சென்று அவன் கொடுக்கும் உணவில் உங்களுக்கும் கொஞ்சம் தருகிறேன்' என்றது சிங்கம்.

அன்று மூன்றும் ஒன்று சேர்ந்து சென்றன. தச்சன் தூரத்திலிருந்தே இதைக் கண்டு விட்டான். உடனே அங்கிருந்த மரத்தின் மீது தாவி ஏறிக்கொண்டான். அது கண்ட சிங்கம் அம்மரத்தடிக்குச் சென்று 'நண்பா! நான் வருவதைப் பார்த்தும் ஏன் இப்படி மரத்தின் மீது ஏறி அமர்ந்து கொண்டாய்?' என்று கேட்டது.


'உம்மை எனக்குப் பிடித்து இருக்கிறது. ஆனால் உம்முடன் வந்திருக்கும் நரியையும் காக்கையையும் எனக்குப் பிடிக்கவில்லை. அதனால்தான் மரத்தில் ஏறிக்கொண்டேன்' என்று பதில் சொன்னான் தச்சன். அதனால் அன்று மூன்றுமே பசியோடு திரும்பின.

தீயோர் சூழ்ந்து இருக்கும் வேளையில் அரசனை அணுகுதல் கூடாது. அரசன் நல்லவனாயிருந்தாலும் அத்தீயோர் நல்லது செய்யவிடாது அரசனைத் தடுத்து விடுவர். அதனால் நல்லவர்களாக யார் இருந்தாலும் அவர்கள் யாருடன் இருக்கிறார்கள் என்று பாாத்துத்தான் அவர்களை நாம் அணுகவேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியான சித்தன் ~ நரேன்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்ககுருவின் மகாசமாதி

ஸ்ரீராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷனின் 14 ஆம் சங்ககுருவாகிய ஸ்ரீமத் சுவாமி கஹனானந்தஜி மகராஜ் அவர்கள் கடந்த 04.11.2007 அன்று மகாசமாதி எய்தினார். பங்காளதேஷின் பெஹர்பூர் என்ற இடத்தில் 1916 ஆம் ஆண்டு பிறந்த சுவாமிகளின் இயற்பெயர் நரேஷ் ரஞ்சன்ராய் சௌத்ரி என்பதாகும். சிறுவயது முதலே ஸ்ரீராமகிருஷ்ண சங்கத் துறவிகள்பால் ஈர்க்கப்பட்டிருந்த சுவாமிகள் ஸ்ரீராமகிருஷ்ணரின் நேர்ச் சீடரான சுவாமி அபேதானந்தரையும் சந்தித்து ஆசி பெற்றுள்ளார்.

தனது 22 ஆம் வயதில் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தில் துறவியாக இணைந்த சுவாமிகள் அன்றைய சங்ககுருவாகிய சுவாமி விரஜானந்தரிடம் மந்திர தீட்சை பெற்றுக் கொண்டார். 1948 ஆம் ஆண்டு துறவறப் பயிற்சியை முடித்த பின்னர் சந்நியாச தீட்சை பெற்றுக் கொண்டு சங்கத்தின் மூத்த துறவிகளாகிய சுவாமி அசலானந்தர், சுவாமி சங்கரானந்தர் ஆகியோருக்குச் சேவையாற்றினார். 1942 - 1952 வரை கல்கத்தா அத்வைத ஆசிரமத்திலும், 1953 - 1958 வரை ஷில்லாங்கிலும் சுவாமிகள் சேவை செய்தார். அப்போது அஸாம் பகுதியில் இடம்பெற்ற வெள்ள நிவாரணப் பணிகளிலும் சுவாமிகள் பணியாற்றினார். 1958 முதல் இராமகிருஷ்ண மிஷன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவாபிரதிஷ்டான் மருத்துவமனையில் பணியாற்ற ஆரம்பித்த சுவாமிகள் அங்கு சுவாமி தயானந்தரின் உதவிச் செயலாளராக ஐந்து ஆண்டுகளும், 22 ஆண்டுகள் அந்த மருத்துவ மனையின் தலைவராகவும் பணிபுரிந்தார். சுவாமிகளின் அயராத உழைப்பினால் சிறிய அளவில் இயங்கி வந்த மருத்துவமனையின் சேவைகள் விரிவாக்கம் பெற்றன. 1965 இல் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் அறங்காவலராகவும், செயற்குழு உறுப்பினராகவும் நியமிக்கப்பட்ட சுவாமிகள் 1979 இல் ஸ்ரீராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷனின் உதவிச் செயலாளர் ஆனார். 1989 இல் அதன் பொதுச் செயலாளர் ஆனார். 1992 இல் உப தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சுவாமிகள் 2005 ஆம் ஆண்டில் தவத்திரு ரங்கநாதானந்தஜி மகராஜ் அவர்களின் மகாசமாதியைத் தொடர்ந்து ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் 14 ஆவது சங்ககுருவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஸ்ரீராமகிருஷ்ணர், ஸ்ரீசாரதாதேவி, சுவாமி விவேகானந்தர் ஆகியோரது செய்தியை நாற்றிசையும் முழங்கிய ஆன்மீகச் செம்மல் சுவாமிகள். அவர் அமெரிக்கா, கனடா, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், சுவிட்சலாந்து, ஹொலண்ட், இரஷ்யா, அவுஸ்திரேலியா, ஜப்பான், மியன்மார், இலங்கை, பங்காளதேஷ், சிங்கப்பூர், மலேஷியா மற்றும் மொரீஷியஸ் உள்ளிட்ட பல நாடுகளுக்குச் சொற்பொழிவுச் சுற்றுலாக்கள் மேற்கொண்டு ஆன்ம விடுதலையின் செய்தியைப் பறைசாற்றியுள்ளார்.

---

*அந்த அந்த நாளின் நெறியுடன் கூடிய செயல்கள். அந்த அந்த நாளின் நெறியுடன் கூடிய நிகழ்ச்சிகள், அந்த அந்த நாளின் பெருந்தன்மை மிக்க சொற்கள், அந்த அந்த நாளின் உயர்ந்த செயல்கள் என்னும் இவை தவிர, மனிதனின் முன்னேற்றத்திற்கு வேறு தீர்வு இல்லை என நன்றாக ஆராய்ந்த பிறகு கூறலாம்.*

*- ஓர் மேலைநாட்டு அறிஞர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமகிருஷ்ண குடும்பம்
## யோகின்மா

யோகின்மாவின் வாழ்க்கை பெண்மை, தவம் ஆகியவற்றுக்கு ஓர் இலக்கணமாகத் திகழ்கிறது. அவர் அமைதியும், இனிமையம் நிறைந்தவராக விளங்கியதுடன், சேவை மனப்பான்மையும் ஆன்மீக ஞானமும் கைவரப் பெற்றிருந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிஷ்யைகளுள் யோகின்மா முக்கியமான ஒருவர். குருதேவரே ஒருமுறை 'யோகின் பிருந்தாவனத்துக் கோபியருள் ஒருத்தி. இறைவனின் கருணையால் நிறைநிலையை அடைந்தவள்.' என்று கூறியுள்ளார்.

யோகீந்திர மோகினி அல்லது யோகின்மா 1851 ஜனவரி 16 இல் வடக்குக் கல்கத்தாவில் உள்ள பாக்பஜாரில் பிறந்தார். அவரது வீடு குருதேவரின் இல்லற பக்தரான பலராமின் வீட்டிற்கு அருகில் இருந்தது. யோகின்மாவின் அப்பாவான பிரசன்ன குமார் மித்ரா புகழ் பெற்ற மருத்துவராகவும், மகப்பேற்றுத் துறையில் வல்லுனராகவும் இருந்தார். மருத்துவத் தொழிலுடன் கல்கத்தா மருத்துவக் கல்லூரியில் மருத்துவத் துறைச் சொற்பொழிவாளராகவும் அவர் பணியாற்றினார். வசதி படைத்தவராக இருந்ததால் தோட்டத்துடன் கூடிய பெரிய வீடு ஒன்று அவருக்குச் சொந்தமாக இருந்தது. வீட்டின் ஒரு பக்கத்தில் சிவன் கோயில் அமைந்திருந்தது. அவருக்கு இரண்டாவது திருமணத்தின் போது பிறந்த இரண்டு பெண் குழந்தைகளில் யோகின்மா இளையவர்.

யோகின்மாவுக்கு ஏழு வயதான போது பெரும் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த அம்பிகா சரண் என்பவருடன் திருமணம் நடந்தேறியது. யோகினின் கணவர் மிக்க குடிகாரராக இருந்தார். யோகின்மா தன் கணவருடன் ஐந்து வருடங்கள் குடித்தனம் நடாத்தினார். கணவரைத் திருத்த அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்ட முயற்சிகள் யாவும் வீண்போயின. அவர்களுக்கு 'கணு' என்ற பெயருடைய ஒரு பெண் குழந்தையும் ஒரு ஆண் குழந்தையும் பிறந்தனர். ஆண் குழந்தை பிறந்த ஆறு மாதங்களிலேயே இறந்து விட்டது. திருமண வாழ்வைக் குறித்த இன்பமயமான கனவுகள் யாவும் தகர்ந்து போன நிலையில் யோகின்மா இதயத்தில் தாங்க முடியாத வெறுமையை உணர்ந்தார். மன உளைச்சலும் கவலையும் அவரை ஆட்டிப்படைத்தன. எஞ்சியுள்ள வாழ்நாளை எப்படிக் கழிப்பது என்று அவர் கவலைப்படலானார். இவ்வாறு அவர் தனது மனத்தினுள் பெரும் புயலைச் சந்தித்துக் கொண்டிருந்த போதுதான் இறைவன் அவர்மீது கருணை மழை பொழிந்து புதிய வாழ்க்கைக்கு அவரை அழைத்துச் சென்றார். 1882 இல்தான் யோகின்மா ஸ்ரீராமகிருஷ்ணரை முதன்முதலாகச் சந்தித்தார். அதன் பின் அடிக்கடி குருதேவரைச் சந்தித்து அவரது அமுத மொழிகளைப் பருகி வந்த யோகின்மா, சிறிது காலத்தின் பின்னர் அன்னை ஸ்ரீசாரதாதேவியையும் சந்தித்தார். இருவரும் விரைவிலேயே நெருக்கமாகிவிட்டனர். இருவருக்குமே ஏறத்தாழ சமவயதுதான். அன்னை ஸ்ரீசாரதாதேவியே ஒருமுறை 'யோகின் எனது தோழி, நண்பி, வேலைக்காரி, எல்லாம்' என்று கூறியுள்ளார்.

இறைவனால் நிறைக்கப்பட்டதொரு வாழ்க்கையை மேற்கொண்டிருந்த ஸ்ரீராமகிருஷ்ணர் மற்றும் அன்னை ஸ்ரீசாரதாதேவி ஆகியோரின் தொடர்பினால் யோகின்மாவின் மனத்திலும் ஆன்மப்பசி உண்டாகியது. இதனால் அவர் தனது சக்தி முழுவதையும் ஆன்மீகப் பயிற்சிகளை மேற்கொள்வதில் செலவழிக்க ஆரம்பித்தார். நாள் முழுவதும் வழிபாடு, படிப்பு, ஜபம், தியானம் ஆகியவற்றில் ஈடுபட்டார். குருதேவர் அவரை நிறையப் புத்தகங்களைப படிப்பதற்கு உற்சாகப் படுத்தவில்லை ஆயினும் பக்தி சாஸ்த்திரங்கள் சிலவற்றைப் படிப்பதற்கு அனுமதித்திருந்தார். இளமைப் பருவத்தில் கொஞ்சமே படித்திருந்த அவர் இக்காலப்பகுதியில் தினந்தோறும் மதிய வேளைகளில் புராணங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாபாரதம், இராமாயணம், கீதை, தாந்திரீக சாஸ்த்திர நூல்கள் மற்றும் ஸ்ரீசைதன்யரின் வாழ்க்கைக் காவியம் ஆகியவற்றை விரும்பிப் படிக்க ஆரம்பித்தார்.

மேலும் யோகின்மா திடமான மனவுறுதி கொண்டவர். அவர் எந்தக் காரியத்தை எடுத்தாலும் அதைச் செய்து முடிக்கும் வரை ஓய மாட்டார்.

யோகின்மா குருதேவரின் துறவிச் சீடர்களைச் சொந்தக் குழந்தைகளைப் போல் போற்றினார். அவர்களும் யோகின்மாவுடன் மிகுந்த உரிமையுடன் பழகினர். ஒருமுறை கல்கத்தா சென்றிருந்த சுவாமிஜி அவரிடம்



'நான் உங்களுடன் மதிய உணவைச் சாப்பிட விரும்புகிறேன். நல்ல கறிவகைகளைச் சமைத்து வையுங்கள்.' என்று கூறினார். மற்றொரு சமயம் அவர் யோகின்மாவிடம் எனக்கு இன்று பிறந்த நாள். எனவே அரிசிப் பாயாசம் செய்து எனக்கு விருந்து வையுங்கள்.' என்றார். யோகின்மாவிற்கு நன்றாகச் சமைக்கத் தெரியும். அன்னை, குருதேவர், துறவிச் சீடர்கள் என்று அனைவருமே அவரது சமையலை விரும்பிச் சுவைத்தனர்.

துறவு இலட்சியத்தின் மீது யோகின்மாவுக்கு ஆழமான மதிப்பிருந்தது. ஒருநாள் இளம் துறவி ஒருவர் சுவாமி சாரதானந்தரின் அறையில் இருந்து, அவர் சொல்லச் சொல்லக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தார். அப்போது யோகின்மா அந்த அறைக்குள் ஏதோ விஷயமாக நுழைந்தபோது தவறுதலாக அவரது பாதங்கள் அந்த இளம் துறவியின் ஆடையை மிதித்து விட்டன. உடனே பதறிப்போன அவர் இரு கைகளையும் கூப்பி அந்தத் துறவியை வணங்கினார். துறவியோ யோகின்மாவின் மீது அளவுகடந்த மதிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்தார். எனவே துறவி அவரிடம் 'தங்கள் திருப்பாதங்கள் என்மீது படுவதை மிகப்பெரும் ஆசீர்வாதமாகக் கருதுகிறேன். எனவே தயவுசெய்து தங்கள் திருப்பாதங்கள் என்மீது பட்டதற்காக வருந்த வேண்டாம்.' என்று கூறினார். ஆனால் யோகின்மா 'நீயோ ஒரு துறவி. உனது காவி உடை துறவின் சின்னம். ஸ்ரீராமகிருஷ்ணரின் உயர்விற்குக் காரணமாக அமைந்ததே இந்தத் துறவுதான். நீ அவரது வழிமுறைகளைப் பின்பற்றுபவன். குட்டி நாகத்தின் விஷம் பெரிய நாகத்தை விட எந்த விதத்திலும் குறைந்ததில்லை.' என்று பதில் கூறினார். அவரது வார்த்தைகள் அந்தத் துறவிக்குத் தாம் அணிந்திருக்கும் காவியுடை எவ்வளவு பெரிய பொறுப்பைத் தம்மீது சுமத்தியிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள உதவியது.

அன்னை ஸ்ரீசாரதாதேவி 1920 இல் மகாசமாதி அடைந்தபோது யோகினின் உள்ளம் நிறைவு செய்யப்பட முடியாத வெறுமையை உணர்ந்தது. யோகின்மா அவரிடமும் குருதேவரிடமும் சென்றுவிடத் துடித்தார். அதற்கு இரண்டு வருடங்கள் கழித்து சுவாமி பிரம்மானந்தரும், சுவாமி துரியானந்தரும் மகாசமாதி அடைந்தபோது யோகின்மா அடைந்த துயரத்தை வார்த்தைகளால் விளக்க முடியாது. உடல்நிலை மிகவும் சீர்குலைந்து இருந்த போதும் அவர் 1923 இல் சுவாமி சாரதானந்தருடன் ஜெயராம்பாடி சென்று அன்னை ஸ்ரீசாரதாதேவியின் கோயில் திறப்பு விழாவில் கலந்து கொண்டார்.

கடைசி இரண்டு வருடங்கள் அவர் சர்க்கரை வியாதியால் அவதிப்பட்டார். கடும் தவ வாழ்க்கையினால் அவரது உடல் பலவீனமாகி உருக்குலைந்து போயிருந்த போதிலும் அவரது மனம் எப்பொழுதும் விழிப்பு நிலையில் குருதேவர், அன்னை, சுவாமிஜி மற்றும் நேர்ச்சீடர்களுடன் கழித்த நாட்களைக் குறித்தே எண்ணிக் கொண்டிருந்தது. 1924 ஜான் 4 புதன்கிழமை அன்று மடத்துப் பணிகள் அனைத்தும் நிறைவுற்ற நிலையில் இரவு 10.25 மணிக்கு உத்போதன் அலுவலகத்தில் அன்னை ஸ்ரீசாரதாதேவி வாழ்ந்த அறைக்குப் பக்கத்து அறையில் யோகின்மாவின் உயிர் உடலை விட்டுப் பிரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கடந்த 3-12-2007 அன்று நடைபெற்ற ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் ஸ்ரீமத் சுவாமி ஆத்மஸ்தானந்தஜி மகராஜ் அவர்கள் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் புதிய சங்ககுருவாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். சுவாமிகள் டினாஜ்பூர் என்னும் நகரத்தைச் சேர்ந்த ஷேத்ரிப்ரா என்னும் இடத்தைச் சேர்ந்தவர். அவர் தற்போதைய பங்களாதேஷின் டாக்காவிற்கு அண்மையிலுள்ள சபாஜ்பூர் என்னும் ஊரிலுள்ள அவரது தாய்மாமன் வீட்டில் 1919 ஆம் ஆண்டில் பிறந்தார். சுவாமிகள் உயர்தர வகுப்பு மாணவனாக இருந்தபோது டினாஜ்பூர் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் அன்றைய தலைவரும், மகாபுருஷ் சுவாமி சிவானந்தரின் சீடருமாகிய சுவாமி கதாதரானந்தஜி மகராஜ் அவர்களுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தார். அந்தக் காலத்தில் சுவாமிகள் ஸ்ரீராமகிருஷ்ணர் மற்றும் சுவாமி விவேகானந்தரின் கருத்துக்களாற் பெரிதும் கவரப்பட்டார். தனது உயர்தரக் கல்வியை முடித்த பின்னர் பட்டக்கல்வியைத் தொடர்வதற்காக ஸ்கொட்டிஷ் சேர்ச் ஸ்கூல் (Scottish Church School) இல் அனுமதி பெற்றுக்கொண்ட சுவாமிகள் சிறிது காலத்தின் பின் அங்கிருந்து கல்கத்தா, பிறசிடென்சி கொலிஜ் (Presidency College) இற்கு மாறினார். அக்காலப்பகுதியில் சுவாமிகள் கல்கத்தா, ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் மாணவரில்லத்தில் தங்கிப் படித்து வந்தார். தத்துவத்தில் தனது பட்டக் கல்வியை மேற்கொண்ட சுவாமிகள், அந்தத் துறையில் முதுமாணிக் கல்வியை கல்கத்தா பல்கலைக் கழகத்தில் ஆரம்பித்தார்.

– பூஜ்ய ஸ்ரீமத் சுவாமி ஆத்மஸ்தானந்தஜி மகராஜ் புதிய சங்ககுரு

தனது மாணவப் பருவத்திலேயே ஸ்ரீராமகிருஷ்ண சங்கத் துறவியர் சிலரின் தூய வாழ்க்கையால் சுவாமிகள் ஈர்க்கப்பட்டார். குறிப்பாக சுவாமி பிரம்மானந்தரின் சீடரும், கல்கத்தா இராமகிருஷ்ண மிஷன் மாணவரில்லத்தின் ஸ்தாபகருமாகிய சுவாமி நிர்வேதானந்தர், சுவாமி விவேகானந்தரின் சீடரும், சங்கத்தின் அன்றைய உபதலைவருமாகிய சுவாமி அசலானந்தர் ஆகிய துறவிகள் சுவாமிகளின் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். ஸ்ரீராமகிருஷ்ணர் மற்றும் சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் தாக்கமும், அந்தச் சிந்தனைகளின் வாழும் விளக்கவுரைகளாகிய இராமகிருஷ்ணத் துறவியரின் சத்சங்கமும் சுவாமிகள் மாணவனாக இருந்தபோதே மந்திர தீட்சை பெற்று ஆன்மீக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்க்கை வாழ்வதற்கு ஏதுவாக அமைந்தன. சுவாமிகள் 1938 ஆம் ஆண்டு ஸ்ரீராமகிருஷ்ணரின் நேர்ச்சீடர்களுள் ஒருவரும் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் 4 ஆவது சங்ககுருவுமாகிய சுவாமி விஞ்ஞானானந்தரிடம் மந்திர தீட்சை பெற்றுக் கொண்டார். அத்துடன் தனது இளமைக் காலத்திலேயே ஸ்ரீராமகிருஷ்ணரின் மேலும் இரு நேர்ச்சீடர்களாகிய சுவாமி அகண்டானந்தர் மற்றும் சுவாமி அபேதானந்தர் ஆகியோரைத் தரிசித்து ஆசி பெறும் பாக்கியத்தையும் பெற்றிருந்தார்.

தனது 22 ஆம் வயதில் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தில் இணைந்து கொண்ட சுவாமிகள் 1945 ஆம் ஆண்டில் சுவாமி விரஜானந்தரிடம் பிரமச்சரிய தீட்சை பெற்று பிரமச்சாரி ஷாந்தி சைதன்யர் ஆனார். 1949 ஆம் ஆண்டளவில் சந்நியாச தீட்சை பெற்று சுவாமி ஆத்மஸ்தானந்தர் ஆனார். சங்கத்தில் இணைந்து இரண்டு மாதங்களின் பின்பு முறையே டியோகர் வித்தியா பீடத்திற்கும், மாயாவதி அத்வைத ஆசிரமத்திற்கும் மாற்றப்பட்ட சுவாமிகள் அதன் பின்னர் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் அன்றைய சங்ககுருவாகிய சுவாமி விரஜானந்தருக்கு நீண்ட காலம் சேவையாற்றும் வாய்ப்பைப் பெற்றார். மேலும் சுவாமி விரஜானந்தர் இமாலயத்தின் சிம்லா தால் பகுதியில் தங்கித் தவமியற்றிய காலப்பகுதியிலும், சுவாமிகள் அவருக்கு உடனிருந்து சேவையாற்றினார். 1952 ஆம் அண்டளவில் சுவாமிகள் ராஞ்சியிலுள்ள (TB Senatorium) இன் உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டார். அங்கு அந்நிறுவனத்தின் சேவைகளை விரிவுபடுத்தும் பொருட்டுக் கடுமையாக உழைத்த சுவாமிகள் 1958 ஆம் ஆண்டில் ரங்கூனிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் சேவாஸ்ரமத்தின் செயலாளராக நியமிக்கப்பட்டார். அங்கு மிஷன் சேவாஸ்ரம மருத்துவமனையை நவீன மருத்துவ வசதிகள் பொருந்திய ஒரு மருத்துவ மனையாக மாற்றுவதில் சுவாமிகள் கடுமையாக உழைத்தார். சுவாமிகளின் காலத்தில் அந்த மருத்தவமனையானது பர்மாவின் முதன்மை மருத்துவமனையாக விளங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். 1965 இல் பர்மிய இராணுவ ஆக்கிரமிப்பாளர்கள் ரங்கூன் மருத்துவமனையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்பற்றியதைத் தொடர்ந்து இந்தியாவுக்கு மீண்டார் சுவாமிகள். 1966 இல் மிஷனின் ராஜ்கோட் மையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். அங்கு அவர் தலைவராக இருந்த காலத்தில் குஜராத் மாநிலம் முழுவதும் திரிமூர்த்திகளின் செய்தி பரவுவதற்காக அரும்பாடுபட்டார். குஜராத்தில் வாழ்ந்த கல்விமான்கள், மேல்த்தட்டு வர்க்கத்தினர் மற்றும் பொதுமக்கள் மத்தியில் ஸ்ரீராமகிருஷ்ணரின் செய்தி பரவ உழைத்தார் சுவாமிகள். அத்துடன் ராஜ்கோட்டில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணருக்காக எழில் மிக்கதோர் ஆலயத்தை அமைப்பதிலும் சுவாமிகள் முன்னோடியாகத் திகழ்ந்தார்.

1973 இல் ஸ்ரீராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷனின் நிர்வாகக் குழு உறுப்பினராகத் தெர்ந்தெடுக்கப்பட்ட சுவாமிகள், 1975 ஆம் ஆண்டில் சங்கத்தின் உதவிச் செயலாளராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். அத்துடன் ஸ்ரீராமகிருஷ்ண மடத்திகதும் மிஷனினதும் நிவாரணப் பணிகளுக்கான செயலாளராகவும் சுவாமிகள் பணியாற்றினார். அவரது நெறிப்படுத்தலின் கீழ் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் இந்தியாவின் பல பகுதிகளிலும், நேபாளத்திலு் பங்காளதேஷிலும் பாரிய அளவிலான நிவாரண மற்றும் புனருத்தாரண நடவடிக்கைகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். கமார்புகூரிலும் ஜெயராம்பாடியிலும் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த கிராமிய வளர்ச்சித் திட்டப் பணிகளை ஒழுங்குபடுத்துவதிலும், பேலூர் சாரதா பீடத்தில் நிறுவப்பட்ட சமாஜ் சிக்ஷன் மந்திர் எனப்படும் இளைஞர் பயிற்சி நிலையத்தை வழிநடத்துவதிலும் சுவாமிகளின் பங்கு குறிப்பிடற்பாலதாகும். அத்துடன் சுவாமிகள் பேலூர் மடத்தினாலும், சங்கத்தின் வேறு பல கிளைகளினாலும் முன்னெடுக்கப்பட்ட மேலும் பல முக்கியப் பணித்திட்டங்களை நெறிப்படுத்தியுள்ளார். 1992 ஆம் ஆண்டு சங்கத்தின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்ட சுவாமிகள் 1997 ஆம் ஆண்டு ஸ்ரீராமகிருஷ்ண மடம் மற்றும் மிஷனின் உபதலைவராகும் வரை தொடர்ந்து ஐந்து வருடங்கள் அந்தப் பணியிலேயே இருந்தார்.

சங்கத்தின் உதவித் தலைவர் என்ற முறையில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் அமைந்துள்ள ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் கிளைகளுக்கும் சுவாமிகள் விஜயம் செய்துள்ளார். 1998 இல் அவர் அமெரிக்காவின் பல பிரதேசங்களுக்கும், கனடா, ஜப்பான் மற்றும் சிங்கப்பூருக்கும் விஜயம் செய்துள்ளார். அத்துடன் மலேஷியா பிஜி தீவுகள், இலங்கை, பங்காளதேஷ் ஆகிய நாடுகளுக்கும் வெவ்வேறு காலப்பகுதிகளில் சுவாமிகள் விஜயம் மேற்கொண்டுள்ளார். தான் சென்ற இடங்களில் எல்லாம் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், தூய அன்னை ஸ்ரீசாரதாதேவி, சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் செய்தியைப் பிரச்சாரம் செய்துள்ளார் சவாமிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்

## ❧ *கடந்த இதழ் வெளியீட்டில்....*

அறநெறி அமுதத்தின் 2007 ஆம் ஆண்டுக்கான நான்காவது காலாண்டிதழ் வெளியீட்டில் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அதிபர் திரு. த. முத்துக்குமாரசாமி அவர்கள் ஆற்றிய வெளியீட்டுரையின் ஒரு பகுதி.



அன்பின் குழந்தைகளே! நீங்கள் எல்லோரும் மிகவும் அதிஷ்டசாலிகள். அதனால் தான் இவ்வாறானதொரு இடத்தில் உங்கள் மாணவப் பருவத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் வெளியீடாகிய அறநெறி அமுதம் இதழைப் படித்தேன். மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். குறிப்பாக இவ்விதழ் உங்களாலேயே தயாரித்து வடிவமைக்கப்பட்டு வெளிவருகின்றமையை அறிந்து உவகையுறுகின்றேன். நீங்கள் அனைவரும் எதிர்காலத்தில் சிறந்த எழுத்தாளர்களாக, சிந்தனையாளர்களாக, பேச்சாளர்களாக மலர்வதற்காகவும், மாணவ சமுதாயத்தினிடையே பண்பை வளர்த்திடவும் இராமகிருஷ்ண மிஷன் எடுத்துள்ள இம்முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது. போற்றத்தக்கது.

நீங்கள் இவ்வாறான முயற்சியில் ஈடுபடுவது உங்கள் வாழ்க்கையில் மிகவும் நல்ல பலனைக் கொடுக்கும். நீங்கள் இத்தகைய தூய சூழலில் வளர்வதும், மிஷன் பணிகளில் ஈடுபடுவதும் உங்களைத் தீய வழிகளுக்குச் சென்றுவிடாமல் காப்பாற்றும்.

மேலும் இந்த இதழில் நீங்கள் எழுதும், வாசிக்கும் கருத்துக்கள் உங்கள் வாழ்க்கையில் நெருக்கடியான சந்தர்ப்பங்களில் நினைவுக்கு வந்து உங்களை வழிநடத்தும்.

## ❧ *இராஜமந்திர் இராமகிருஷ்ண மிஷன் செயலாளர் சுவாமி அஷராத்மானந்தர் அவர்கள் எமது சமய பாடசாலை மாணவர்களுக்கு ஆற்றிய உரையின் சுருக்கம்*

ஒரு வகுப்பின் ஆசிரியர் தனது மாணவர்களிடம் கேட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உங்களில் மகாத்மா காந்தியைக் குறித்து எத்தனை பேருக்குத் தெரியும்?". ஏறத்தாழ அனைவருமே கை உயர்த்தினார்கள். அடுத்த வினா "எத்தனை பேருக்கு சுவாமி விவேகானந்தரைத் தெரியும்?" அதற்கும் பலர் கை உயர்த்தினர். வினா தொடர்ந்தது. "உங்களில் எத்தனை பேருக்கு ஆதி சங்கரரைத் தெரியும்." அதற்கும் அனைவரும் கை உயர்த்தினர். அடுத்த வினா - "எத்தனை பேருக்கு விஞ்ஞானி அயின்ஸ்டீன் பற்றித் தெரியும்?" அதற்கும் பலர் கை தூக்கினர். அடுத்த வினா - "உங்களில் எத்தனை பேருக்கு உங்கள் தாத்தவைத் தெரியும்?" கைகள் குறைவாகவே உயர்ந்தன. அடுத்த வினா - "எத்தனை பேருக்கு உங்கள் கொள்ளுத் தாத்தா குறித்துத் தெரியும்?" கைகளே உயரவில்லை. எங்கெங்கோ பிறந்த காந்திஜியையும், சுவாமி விவேகானந்தரையும், அயின்ஸ்டீனையும் தெரிந்து வைத்திருக்கும் இம்மாணவர்களுக்குத் தங்கள் தாத்தாவையும் கொள்ளுத்தாத்தாவையும் தெரியாதே!!! ஏன்? ஆசிரியர் காரணத்தை விளக்கினார். ஆதிசங்கரரும், விவேகானந்தரும், காந்திஜியும் வாழ்வில் சாதித்திருக்கிறார்கள். அவர்கள் வரலாற்றில் அழியா இடம் பெற்றிருக்கிறார்கள். எனவே நாமும் வாழ்வில் ஏதாவது சாதிக்க வேண்டும்." என்று மாணவர்களுக்கு அறிவுறுத்தினார்.


## ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் - கொழும்பு
## நிகழ்ச்சி நிரல்

தினசரி பூஜை - காலை 7.00 மணி,
மாலை 6.30 மணி (மங்களாரதி)
பஜனை - வெள்ளி மாலை 5.30 மணி
ஏகாதசி - ஸ்ரீராம நாம பஜனை- மாலை 5.15 மணி
பூரணை தினங்கள் - சத்சங்கம் - காலை 9.00 மணி
பஜனை - மாலை — 5.30 மணி
ஆன்மீகச் சொற்பொழிவு
ஆங்கிலம் - சனி மாலை 5.30 மணி
தமிழ் - ஞாயிறு மாலை 5.30 மணி (பகவத் கீதை)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுக்கெழுத்துப் போட்டி



### இடமிருந்து வலம்

01. முக்குணங்களில் ஒன்று
04. வானம்
06. பக்தர்கள் செல்வது (குழம்பி உள்ளது)
08. நன்னாள் (குழம்பி உள்ளது)
10. சக்திக்குரிய விரதம் (வலமிருந்து இடமாக)
11. ............... தாயாகப் பூஜித்தார் குருதேவர் (குழம்பி உள்ளது)
12. யானையை இவ்வாறும் அழைப்பர்.

### மேலிருந்து கீழ்

01. யமனிடம் இருந்து கணவனை மீட்டவள்
02. கிருஷ்ணனின் சகோதரி (குழம்பி உள்ளது)
05. கடவுளை அடைய சிறந்த வழி ........ செய்தலாகும்
07. கதாதரனின் தந்தை (குழம்பி உள்ளது)
09. மிருகண்டு முனிவர் புத்திர........ வேண்டி சிவனை பிரார்த்தித்தார் (குழம்பி உள்ளது)
13. சிவபெருமான் ................களைப் பரிகளாக்கினார்.

**விடைகளுக்கான இறுதித் திகதி :31 - 03 - 2008**
அனுப்ப வேண்டிய முகவரி:'அறநெறி அமுதம்', இராமகிருஷ்ண மிஷன், 40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு 06.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னை நினைத்துக்கொள்

ஒரு இளைஞர் அன்னை ஸ்ரீசாரதாதேவியை அடிக்கடி சென்று தரிசித்து வருவார். அவர் மீது அன்னை மிகுந்த அன்பு பூண்டிருந்தார். அவரும் அன்னை மீது மிகுந்த பக்தியும் மதிப்பும் வைத்திருந்தார். திடீரென்று ஒருநாள் அன்னையிடம் வந்த அவர் "அம்மா! இந்த இடத்திற்கு நான் தகுதியற்றவன். உங்களிடம் வருவதற்கே நான் அருகதை இல்லாதவன். அதனால் நான் உங்களிடம் விடைபெறுகிறேன்." என்று கூறி அன்னையை வணங்கிவிட்டு வேகமாக ஓட ஆரம்பித்தார். இதைக்கண்ட அன்னை எழுந்து அவரைத் தொடர்ந்து ஓட ஆரம்பித்தார். அன்னை தன்னைத் தொடர்வதைக் கண்ட இளைஞர் மேலும் வேகமாக ஓடத் தொடங்கினார். அவரைத் துரத்திச் சென்று அவரது சட்டையைப் பிடித்த அன்னை, மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க "மகனே! நீ ஏன் ஓடுகிறாய்?" என அன்புடன் வினவினார். அந்த இளைஞரோ தான் அவ்விடத்திற்குத் தகுதியற்றவன் எனவும், தான் அங்கு வருவது அவ்விடத்தின் புனிதத் தன்மைக்கு ஊறு விளைவிக்கும் என்றும் கூறி, தன்னை விட்டுவிடுமாறு அன்னையின் கால்களைப் பிடித்துக் கெஞ்சினார். கதறியழுதார். ஆனால் அன்னை அவரை விடவில்லை. அவரது முகத்தை நேராகப் பார்த்து உறுதியான குரலில் "உன்னைத் தொந்தரவு செய்யும் எண்ணங்கள் தோன்றும் போதெல்லாம் என்னை நினைத்துக்கொள்." என்று கூறினார். இவ்வாறு அன்னையால் ஆட்கொள்ளப்பட்ட அவ்விளைஞன் பிற்காலத்தில் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தில் இணைந்து துறவியாகினான். தீய எண்ணங்களின் தாக்கத்தால் தவித்துக் கொண்டிருந்த இளைஞனுக்கு அன்னை காட்டிய கருணைதான் என்னே! என்னே!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சிந்தனைக்கு...



ஜோர்ஜ் வாஷிங்டன் (George Washington) அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி. அவர் தலைமையில் அமெரிக்காவில் போர்நடந்து கொண்டிருந்த சமயம். பத்துப் பதினைந்து போர் வீரர்கள் ஓர் உத்திரத்தைப் படாதபாடுபட்டு நகர்த்திக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் குழுவின் தலைவன் குதிரையில் அமர்ந்தபடி அவர்களை அதட்டி உருட்டி வேலை வாங்கிக் கொண்டு இருந்தான். அவர்கள் ஒரு குறிப்பிட்ட உயரத்துக்கு மேல் அந்த உத்திரத்தை நகர்த்த முடியாதபடி அதிகச் சிரமபட்டார்கள். வேகமாக அதட்டினான் அந்த குழுவின் தலைவன்.

அப்போது குதிரையில் வந்த வீரன் ஒருவன் தலைவனைப் பார்த்து, 'அவர்கள் இவ்வளவு கஷ்டப்படுகிறார்களே;.. நீயும் அவர்களோடு சேர்ந்து அதை நகர்த்தக் கூடாதா? ' என்று கேட்டான். குழுத்தலைவன், 'நான் யார் தெரியுமா? நான் அவர்களின் தலைவன், அவர்களோடு சமமாக நான் வேலை செய்ய முடியுமா?' என்று உறுமினான்.

குதிரையில் வந்தவன் இறங்கி, வீரர்களுக்கு உதவி, உத்திரத்தை நகர்த்தி அதன் இடத்தில் வைத்துவிட்டு பிறகு தனது குதிரையில் ஏறி அமர்ந்தான். அந்த குழுவின் தலைவனைப் பார்த்து, 'இனி இப்படிக் கடினமான வேலை ஏதாவது இருந்தால் சொல்லி அனுப்புங்கள். அவசியம் நான் வந்து உதவுகிறேன்' என்று உரக்கச் சொன்னான்.

'நீ யார்? உனக்கு எப்படி சொல்லி அனுப்புவது? உன் இருப்பிடம் எது?' என்று அலட்சியமாக குழுத்தலைவன் கேட்டான். 'நானா, நான் ஜார்ஜ் வாஷிங்டன். உங்கள் தலைமைத் தளபதி ' என்று அழுத்தமாகக் கூறிவிட்டுக் குதிரையைத் தூண்டிச் சிட்டாய்ப் பறந்தார் ஜார்ஜ் வாஷிங்டன். அந்த நாட்டின் வெற்றியின் இரகசியம் புரிகிறதா?.

அன்பளிப்பு ரூ. 10.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org